செ.வெ.எண்:51 நாள்: 26.01.2018

**நாகப்பட்டினம் மாவட்ட விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற 69-வது குடியரசு தின விழாவில்**
**மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார்,இ.ஆ.ப அவர்கள்**
**தேசிய கொடியை ஏற்றி வைத்து காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டு சுதந்திர போராட்ட தியாகிகளை கௌரவித்து**
**139 பயனாளிகளுக்கு ரூ.72 இலட்சத்து 88 ஆயிரத்து 350 மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**

நாகப்பட்டினம் மாவட்ட விளையாட்டு மைதானத்தில் 26.01.2018 அன்று நடைபெற்ற 69-வது குடியரசு தின விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார்,இ.ஆ.ப., அவர்கள் தேசியக் கொடியை ஏற்றிவைத்து மரியாதை செலுத்தி, காவல்துறை, ஊர்காவல் படை, தேசிய மாணவர் படை, சாரணியர் ஆகியோரது அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

தொடர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார்,இ.ஆ.ப., அவர்கள்,

8 சுதந்திர போராட்ட தியாகிகளுக்கு சால்வை அணிவித்து கௌரவித்தார். காவல்துறையில் சிறப்பாகப் பணிபுரிந்த ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள், தலைமை காவலர்கள், அலுவலர்கள் உள்ளிட்ட 26 பேருக்கு பாராட்டுச் சான்றிதழையும், தலைமை காவலர்கள் 15 பேருக்கு 2018 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு முதலமைச்சரின் காவல் பதக்கமும், வருவாய் துறையில் 20 மற்றும் 25 ஆண்டுகள் பணிமுடித்தும், தண்டனைகள் ஏதும் பெறாமலும், அரசுப் பணியினை சிறப்பாக ஆற்றிவரும் 05 அலுவலர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களும், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் தூய்மை பாரதம் திட்டத்தின் கீழ் சிறப்பாக பணியாற்றியமைக்காக 11 பேருக்கு பாராட்டுச் சான்றிதழும், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்டத்தின் கீழ் சிறப்பாக பணியாற்றிய அங்கன்வாடிப் பணியாளர்கள் 03 பேருக்கு மாநில விருதும், தமிழ்நாடு மின்சார வாரியம் சார்பில் சிறப்பாக பணியாற்றியதற்காக 6 நபர்களுக்கு பாராட்டுச் சான்றிதழும், கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் மூலம் சிறப்பாக பணியாற்றியதற்காக 04 அலுவலர்களுக்கு பாராட்டுச் சான்றிதழும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையில் சிறப்பாகப் பணிபுரிந்தமைக்காக 2 பேருக்கு பாராட்டுச் சான்றிதழும், கல்வித்துறையில் சிறப்பாகப் பணிபுரிந்தமைக்காக உதவியாளர் ஒருவருக்கு(1) பாராட்டுச் சான்றிதழும், பொதுசுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறையில் சிறப்பாக பணியாற்றியமைக்காக மருத்துவ அலுவலர் மற்றும் ஊழியர்கள் 07 பேருக்கு பாராட்டுச் சான்றிதழும், குடும்பநலத்துறையின் சார்பில் சிறப்பாக பணியாற்றியதற்காக 6 மருத்துவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ், செய்தி மக்கள் தொடர்புத்துறையில் சிறப்பாக பணிபுரிந்தமைக்காக ஒருவருக்கு பாராட்டுச் சான்றிதழும், சிறந்த நிகழ்ச்சி வர்ணணையாளருக்கான பாராட்டுச் சான்றிதழ் ஒருவருக்கும், யோகா கலையில் சர்வதேச அளவில் சாதனை புரிந்தமைக்காக செல்வி.சுபானு என்பவருக்கு பாராட்டுச் சான்றிதழ் என மொத்தம் 89 பேருக்கு பாராட்டுச் சான்றிதழ்களையும்,

முன்னாள் படைவீரர் நலத்துறையின் சார்பில் 3 நபர்களுக்கு வருடாந்திர தலா ரூ.25 ஆயிரம் வீதம் ரூ. 75ஆயிரம் மதிப்பிலான பராமரிப்பு மான்யத் தொகையும், கூட்டுறவுத் துறையின் சார்பில் ஆடு வளர்ப்பிற்கு கடனுதவியாக தலா ரூ.1,00,000 வீதம் 2 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கும், குழுக் கடனுதவியாக தலா ரூ.4,00,000 வீதம் 2 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கும் என மொத்தம் ரூ.10 லட்சம் மதிப்பிலான கடனுதவியும், மாற்றுத் திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 2 நபர்களுக்கு தலா ரூ.3170 வீதம் ரூ.6340 மதிப்பிலான காதுக்குப் பின் அணியும் காதொலிக் கருவி மற்றும் 3 நபர்களுக்கு தலா ரூ.9500 வீதம் ரூ.28500 மதிப்பிலான எழுத்து உருப்பெருக்கி கருவி என மொத்தம் ரூ.38,840 மதிப்பீட்டிலும், சமூக நலத்துறை சார்பில் முதலமைச்சரின் இரு பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 5 பயனாளிகளுக்கு ரூ.1 லட்சத்து 60 ஆயிரத்து 029 மதிப்பிலான

முதிர்வுத் தொகையும், கல்வித்துறை சார்பில் விபத்து பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் தாய் தந்தையரை இழந்த அல்லது நிரந்தர முடக்கம் அடைந்த பெற்றோருடைய மகன் அல்லது மகளுக்கான கல்வி உதவித்தொகையாக 3 மாணவ மாணவிகளுக்கு தலா ரூ.50,000 வீதம் மொத்தம் ரூ.1 லட்சத்து 50 ஆயிரம் மதிப்பிலும், மாவட்ட தொழில் மையம் மூலமாக தொழில் தொடங்க கடனுதவியாக 8 பயனாளிகளுக்கு மொத்தம் ரூ.6 லட்சத்து 25 ஆயிரம் மதிப்பீட்டிலும், மீன்வளத்துறை சார்பில் மீனவர் விபத்து காப்புறுதி திட்டத்தின் கீழ் நிவாரணத் தொகையாக 3 பயனாளிகளுக்கு ரூ.4 லட்சம் மதிப்பிலும், மகளிர் திட்டம் சார்பில் வங்கிக் கடன் இணைப்புத் திட்டத்தின் கீழ் 2 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு தலா ரூ.5 லட்சம் வீதம் மொத்தம் ரூ.10 லட்சம் மதிப்பிலான கடனுதவியும், தோட்டக்கலைத் துறையின் சார்பில் 2 பயனாளிகளுக்கு ரூ.8,505 மதிப்பிலான வீரிய ரக விதைகளும், வேளாண்மைத்துறையின் சார்பில் தலா ரூ.1,69,320 மதிப்பிலான பவர்டில்லர் 3 பயனாளிகளுக்கும், ரூ.94,840 மதிப்பிலான ரோட்டவேட்டர் 1 பயனாளிக்கும், தலா ரூ.2,100 மதிப்பிலான கைத்தெளிப்பான் 4 பயனாளிகளுக்கும், தலா ரூ.584 மதிப்பிலான உளுந்து விதைகள் 2 பயனாளிகளுக்கும், என ரூ.6 லட்சத்து 12 ஆயிரத்து 368 மதிப்பிலும், தாட்கோ மூலம் 5 பயனாளிகளுக்கு ரூ.32 லட்சத்து 18 ஆயிரத்து 608 மதிப்பிலான கடனுதவி என மொத்தம் 50 பயனாளிகளுக்கு ரூ. 72 இலட்சத்து 88 ஆயிரத்து 350 மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

நாகப்பட்டினம் அமிர்தா வித்யாலயா மேனிலைப்பள்ளி, மேலையூர் சீனிவாசா மேல்நிலைப்பள்ளி, நாகூர் கிரசென்ட் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, நாகூர் மாடர்ன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, திருமங்கலம் அரசு மேல்நிலைப்பள்ளி, நாகப்பட்டினம் அன்னை சத்யா அரசுக் காப்பகம், திருமுல்லைவாசல் அரசு மேல்நிலைப்பள்ளி, உள்ளிட்ட பள்ளி மாணவ மாணவியர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது.

முன்னதாக திரு.ஜி.சந்திரமோகன்(உதவி ஆய்வாளர்), திரு.கே.வெங்கடாசலம்(உதவி ஆய்வாளர்), திரு.ஜி.ஸ்டீபன்(உதவி ஆய்வாளர்), திரு,எஸ்.பிச்சைமுத்து கண்ணன்(உதவி ஆய்வாளர்) ஆகியோர் தலைமையில் காவல்துறையினர் அணிவகுத்துச் சென்றனர். மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார்,இ.ஆ.ப., அவர்கள் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

நாகப்பட்டினம் சட்டமன்ற உறுப்பினர் திரு.எம்.தமிமுன் அன்சாரி, நாகப்பட்டினம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.தேஷ்முக் சேகர் சஞ்சய்,இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.வ.முருகேசன், நாகப்பட்டினம் வருவாய் கோட்டாட்சியர்(பொ) திருமதி.எம்.வேலுமணி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மீ.செல்வகுமார், ஊர்காவல் படை தளபதி திரு.ஆனந்தன், வட்டாட்சியர் திரு.இராகவன், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை அலுவலர் திரு.முகுந்தன், அரசு அலுவலர்கள், பொதுமக்கள், பள்ளி மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு :-**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**